# பேய் அவள் காண் எங்கள் அன்னை கி.ரா.வின். "பேதை"

# Pei Aval Kaan Engal Annai Ke.Ra.Vin "Pethai"

***முனைவர் ந. கார்த்திகா தேவி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சரஸ்வதி நாராயணன் கல்லூரி
பெருங்குடி, மதுரை

**Dr. N. Karthika Devi**
*Assistant Professor, Department of Tamil*
*Saraswathi Narayanan College*
*Perungudi, Madurai*

***ஆய்வுச் சுருக்கம்***

*உலகத்தை இயக்கும் சக்தி எது? "ஒரு நாளைக்கு உணவை ஒழி என்றால் ஒழியாய்"! என்று அவ்வைப்பாட்டி தன்னுடைய வயிற்றைப்பற்றிச் சொன்னாளே, அந்த வயிற்றுப்பசியா? வயிறு நிறைந்தாலும் நிறையா விட்டாலும், பருவத்திலே மனதையும் சேர்த்து வாட்டி வதைக்கும் உடல் பசியா?*

*இந்த உலகத்தில் உள்ள ஜீவராசிகளைக் கடவுள் படைத்தவுடன் அவற்றை நோக்கி "நீங்கள் பல்கிப் பெருகுங்கள் என்று அவர் உத்திரவிட்டதாக திருவிவிலியம் ஆதி ஆகமத்திலே வருகின்றதே அந்த உத்தரவு மனிதனுக்கும் பொருந்துமா? பல்கிப் பெருகவேண்டும் என்ற உயிரின் ஆசை ஒரு மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை ஆட்டி வைத்ததையும் அவளால் ஒரு கிராம மக்கள் பட்ட பாட்டையும் சொல்வதுதான் கி.ராவின் பேதை.*

***முக்கியச் சொற்கள்:***

*பேதை, கி.ரா., சிறுகதை, பண்பாடு, பேச்சி*

**Abstract**

*What is the driving force behind the world? 'Except for one meal a day'; That grandmother said about her stomach, is that stomach hunger? Whether the stomach is full or not full, is the body hungry to grab the mind along with the adolescence?*

*Does that command apply to man, as the Bible says in Adi Agamam, when God created the living things in this world, He commanded them, "Be multiply"? Ke. Ra's 'Pethai' is to tell the story of a mentally ill woman who was chased by a life-long desire to multiply and the struggle faced by the villagers.*

***Keywords:***

*Pethai, Ke.Ra., Sirukathai, short story, culture, Petchi*

**Citation**

Karthika Devi, N. "Pei Aval Kaan Engal Annai Ke.Ra.Vin 'Pethai.'" *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 69–72.

*வரமா வரங்கெடந்து*
*வாசுதேவன் வரம் வாங்கி*
*பந்தலிலே போட்டாலே*
*பாவதோஷம் அடிக்கிமிண்ணு*
*அங்கத்தை இறுக்கிக்கட்டி*
*அடி வயிறு தொட்டிலிட்டு*
*நானாட்டும் தொட்டிலிலே*
*எமனாட்ட விட்டேனே*

**முன்னுரை**

*பேச்சி என்றால் என்ன பொருள்? பேய்ச்சி என்பதன் சுருக்கமாகக் கொள்ளலாமா? ஒரு சாதாரணப் பேச்சி குழந்தை வரம் கிடைத்ததால் பேய்ச்சி ஆன கதையை நம் நெஞ்சு பதைபதைக்கும்படி சொல்லி, இயற்கை இடும் கட்டளைகளுக்கு முன் நாம் அனைவரும் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளே என்று சொல்லிச் செல்கின்றார் கி.ரா.*

*பேச்சி உள்ளூர்க்காரியும் அல்ல் விவசாய வேலை பார்த்து வயிறு வளர்ப்பதற்காக மேற்கிலிருந்து வந்த ஒரு உழைப்பாளிகள் கூட்டத்தைச் சேர்ந்தவள். இயல்பிலேயே மனநல பாதிப்பும் பேச்சுக் குறைபாடும் உடையவள். இயற்கை கொடுக்கும் கொடைதான் நமக்குத் தெரியுமே. ஒன்றை எடுத்துக்கொண்டால் இன்னொன்றால் இட்டு நிரப்புமே. அவளுக்கு மேனி வளப்பத்தை இயற்கை அள்ளிக் கொடுத்திருந்தது. பருவமும் உழைப்பும் சேர்ந்து அவளின் வடிவழகை மேலும் செதுக்கின. மலரைத்தேடி வண்டு வராமல் இருக்குமா என்ன? வண்டின் முகவரி தெரியாவிட்டாலும் மலர் தேனை அள்ளிக்கொடுப்பது போல, பேச்சியும் யாருடன் கூடுகின்றோம் என்று அறியாமலேயே கூடி சூலுற்றாள். அதனால் பேச்சிக்குக் கிடைத்த பரிசு அடியும் உதையும் ஏச்சுக்களும்தான். "கருவுக்குக் காரணம் யார்?" என்ற கேள்விக்கு, பாவம் பேச்சி தெரிந்தால்தானே பதில் சொல்லுவாள். பேச்சியை உதறித்தள்ளிய அவளுடைய கூட்டத்தினர் சொந்த ஊருக்குத் திரும்பி விட, கனி சுமந்த தனிமரமாகினாள் பேச்சி. ஊரே கூடி பிரசவம் பார்க்க, கண்டார் வியக்கும்படி அழகான ஆண் குழந்தையும் பிறந்தது. குழந்தையின் தந்தை யார்? என்று ஊரே தெரிந்து கொள்ள ஆசைப்பட்ட மாதிரி பேச்சியும் ஆசைப்பட்டாள். ஆனால் அது யார் என்பது ஒருவருக்கும் பிடிபடாமலேயே போய்விட்டது.*

*தந்தை பெயர் தெரியாவிட்டால்தான் என்ன? "ரக்ஷ ரக்ஷ ஜகன் மாதா" என்று தாயாரிடம் தானே காப்பாற்று, காப்பாற்று என்று கதறுகின்றோம். பேச்சியும் ஊராரின் ஒத்துழைப்புடன் நல்லபடியாகத்தான் தன் குழந்தையைக் காப்பாற்றினாள். ஆனால் விதி "தொண்டை அடைப்பான்" நோய் என்னும் வடிவத்தில் வந்து குழந்தையின் உயிரைப் பறித்தது. குழந்தைக்கு உயிர் இல்லை என்பதை பேச்சி நம்ப மறுத்தாள். குரங்கு தன்னுடைய இறந்து போன குட்டியைக் கையிலேயே தூக்கித்திரிவதைப் போல, பேச்சியும் சுமந்து திரிந்தாள். அதற்குப் பாலூட்டி தாலாட்டும் படித்தாள். ஊரார்கள் அதனை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி சுடுகாட்டில் புதைத்து, பேச்சியையும் அவளுடைய சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். பேச்சி வீட்டுச்சிறையில் அடைபடுபவளா என்ன? வீட்டின் ஓட்டைப் பிரித்து வெளியேறி, தன்னுடைய குழந்தையைப் பறிகொடுத்த ஊருக்கே சென்று, இடுகாட்டில் புதைத்திருந்த அழுகிய பிணத்தையும் ஏந்திக் கொண்டு ஊரைச் சுற்றி வர ஆரம்பித்தாள். தன் குழந்தையின்*

*பிணத்துடன் சுற்றித்திரிந்த பேச்சியை, அவளுடைய சுற்றத்தினர்கள் மறுபடியும் இழுத்துச்சென்று அடைத்து வைத்தனர். இந்தமுறை சுவரைத்துளையிட்டு வெற்றிகரமாக இடுகாட்டுக்குத் திரும்பிய பேச்சி, அங்கேயே வசிக்கத் துவங்கினாள். பசிக்கு ஆற்றாமல், எரிகின்ற பிணத்தையும் பிடுங்கித் தின்றாள். இரவு நேரங்களில் ஆடையற்ற கோலத்திலேயே பிள்ளை வரத்திற்காக ஒரு துணையைத்தேடி ஊருக்குள் உலவவும் செய்தாள். அவளுக்குப் பயந்து ஊரார்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கினர்.*

*ஊர் நிலவரம் தெரியாத, ஒரு வெளியூர் இளைஞன் மந்தையிலே உறங்க பேச்சியின் கையால், உயிர்நிலை நெறிக்கப்பட்டு செத்து அழிந்தான்; என்றாலும் சுடுகாட்டுப் பேச்சிக்கு எப்படியோ ஒரு துணை கிடைத்து இணையவும் செய்தாள். தன்னுடைய வெற்றியின் அடையாளமாக சூல் கொண்ட வயிற்றுடன் ஆடையற்ற பேச்சி பட்டப்பகலில் கிராமத்தின் நடுத்தெருவில் உலாவர ஊரார் கதவுகளை அடைத்துக்கொண்டு ஜன்னல் வழியே அவளைப் பார்ப்பதாகக் கதை நிறைவடைகின்றது.*

*ஒரு மனநலம் பாதிக்கப்பட்ட, அதுவும் வேற்று ஊரைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு ஏன் அந்த ஊர்க்காரர்கள் பயப்பட்டனர் என்று கி.ரா.நமக்குச் சொல்லவில்லை. சூல் கொண்ட அந்தப் பெண்ணை அவளுடைய உறவினர்கள் கைவிட்ட போதும், ஊரே கூடி பிரசவம் பார்த்து, மருந்து கொடுத்து ஆதரிக்கின்றது. இறந்த பிணத்துடன் சுற்றும் போதும் வேடிக்கை பார்க்கின்றது. அவள் பிணத்தைப் பிடுங்கித் தின்றபோதும் கவலைப்படவில்லை. அவள் கைகளால் ஒரு இளைஞன் உயிர்நிலை நெறிக்கப்பட்டபோதும் ஊரார்கள் அலட்டிக் கொள்ளவில்லை, அவளுடைய நிர்வாணக் கோலத்துக்கும் ஐயரவுப்படவில்லை. மறுபடியும் சூல் கொண்ட வயிற்றுடன் வரும் பேச்சிக்கு ஊரார் அஞ்சி கதவைச் சாத்திக்கொண்டனர். என்பது நமக்கு ஆச்சரியமாக உள்ளது. ஏனெனில் நம்முடைய சமுதாயம் அதிகாரத்துக்கு அடிபணியுமே தவிர ஒரு அபலையைப் பார்த்து அஞ்சியது இல்லை.*

*நிர்வாணத்தைப் பார்த்து கலங்குவது என்பது நமது பண்பாடு. ஆடை உரிக்கப்பட்ட திரௌபதிக்கு கண்ணபரமாத்மாவே ஆடை அளித்ததாகப் புராணம் சொல்லுகின்றது. ஜெயகாந்தனின் ''போர்வை'' சிறுகதையில் வரும் கோபாலன், ஒளிந்திருந்து பக்கத்து வீட்டுப் பெண்கள் குளிக்கும் அழகை ரசிப்பவன்தான். ஆனாலும் அவனே, தான் உடுத்தியிருந்த வேட்டியை, ஆடையற்ற பிச்சைக்காரிக்கு வழங்குகின்றான். ஆனால் ஆடையற்ற பேச்சிக்குத்தான் ஆடை உடுத்திப்பார்க்க யாரும் இல்லை அந்த ஊரில்.*

*பேச்சியைப் போல மனநலம் பாதிக்கப்பட்டு யாரிடமோ வயிற்றில் குழந்தையையும் வாங்கி, அதன் பிணத்தை சுமந்து திரிகின்ற தன்னுடைய சொந்த மகளை, பெற்ற தந்தையே விஷம் வைத்துக்கொல்வதை எழுத்தாளர் சு.வேணுகோபால், தம்முடைய ''தொப்புள்கொடி'' என்ற சிறுகதையிலே காட்டுகின்றார்.*

**முடிவுரை**

*சீதையைத் தூக்கிச் செல்லத் துணிந்த சூர்ப்பணகையை இலட்சுமணன் முதலில் கொல்வதற்காகத்தான் ஆயுதம் எடுக்கின்றான். பெண் எனப் பெருந்தகை நினைந்ததால் அவளைக் கொல்லாமல், மூக்கையும் காதுகளையும் மார்புக்காம்புகளையும் மட்டும் அறுத்து*

*அச்சுறுத்தி விடுவிக்கின்றான். பேச்சியைக் கண்டு பயந்த ஊர்க்காரர்கள், அச்சுறுத்தும் நிலையில் கூட இல்லை என்பதைப் பார்க்கும் போது அவர்களின் கையறு நிலை அல்ல கையாலாகாத தன்மையே முன் நிற்கின்றது.*

**துணைநூற்பட்டியல்**


1. *ராஜநாராயணன் கி - மாயமான், காலச்சுவடு, நாகர்கோவில் - 2021*
2. *வானமாமலை. நா - தமிழர்நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ஜூன் - 1964*
3. *வேணுகோபால். சு - வெண்ணிலை, யுனைடெட்ரைட்டர்ஸ், சென்னை - 14*
4. *ஜெயகாந்தன் - ஜெயகாந்தன் சிறுகதைகள், கவிதா வெளியீடு, சென்னை, ஆகஸ்ட் - 2001*


**References**


1. *Rajanarayanan K., Mayaman, Kalasuvadu, Nagercoil, 2021.*
2. *Vanamamalai, N., Tamil Nadu Padalgal, New Century Book House, Chennai, June, 1964.*
3. *Venugopal, S., Vanillai United Writers, Chennai – 14.*
4. *Jayakanthan, Jayakanthan Short Stories, Kavitha Veliyeedu, Chennai, August, 2001.*